தமிழக சட்டப் பேரவை.

சனிக்கிழமை, 1968 மார்ச் 2.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

* வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

சாலைகள் நிர்வாகம்

*120 வின.—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சி, ஊராட்சி மன்றங்கள் போடும் புதிய சாலைகளை நிர்வகிக்கும் பொறுப்பை, பெருவழித்துறைக்கு (Highways) மாற்றுவதற்குத் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இத்தகைய செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசாங்கத்தின் ஆய்வில் இல்லை. ஆனால், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களால் அமைக்கப்படும் சாலைகளில் பேருந்து வழித்தடச் சாலைகள் இருக்குமானால், அவை ஆண்டுதோறும் படிப்படியாக, நிதி நிலைமையையொட்டி அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுப் பேணுவதற்காக நெடுஞ்சாலை—கிராமப்பணிகள் துறைக்கு மாற்றப்படும்.

திரு. பெ. மலைச்சாமி : ஊராட்சி மன்றங்களில் அமைக்கப்படுகின்ற சாலைகள் 5 ஆண்டுகள் அல்லது 10 ஆண்டுகள் ஆகியும் ஒழுங்காகப் பராமரிக்க இயலாத காரணத்தாலே அந்தப் பகுதியிலுள்ள மக்கள் மிகவும் அல்லலுறுகிறார்கள். ஆகையால் அதை மீண்டும் பரிசீலனை செய்து பெருவழித் துறைக்கு மாற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அரசாங்கப் பேருந்து செல்லுகின்ற ஊராட்சி மன்றச் சாலைகளையும் 1960-ம் ஆண்டுதொட்டு எடுத்துக்கொள்ள முன்வந்து முதலில் 1,000 மைல் என்ற அளவிற்கு ஆண்டுதோறும் எடுத்தபிறகு 500 மைல் என்ற அளவிற்கு வந்து நிதிப் பற்றாக்குறை காரணமாக 250 மைல் என்ற அளவில் இரண்டு மூன்று ஆண்டுகளாக எடுத்துக்கொண்டு வருகிறது. இந்த ஆண்டு 250 மைலாக இருந்ததை 300 மைலாக ஆக்கியிருக்கிறோம். இப்போதுள்ள நிதி நிலை வசதியைப்பொறுத்து அந்த அளவுக்குதான் இயலும்.

திரு. தி. பொன்னுமலை : சுமார் மூன்று ஆண்டுக் காலமாக யூனியன் ரோடுகளை எடுத்துக்கொள்ளும், எடுத்துக்கொள்ளும் என்று நினைத்துப் பல யூனியன்கள் ரோடு வேலைகள் செய்யாமல் விட்டுவிட்டார்கள். பஸ் போக்குவரத்து இருந்துகொண்டிருக்கிறது. அவற்றை இன்னும் சர்க்கார் எடுக்கவில்லை. சர்க்கார் பராமரிக்காமல் விட்டுவிட்டாலும் பழுது பார்ப்பதற்காகிலும் சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : யூனியன் சாலைகளைச் சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஏற்கெனவே குடி நீர் வழங்கல், நீர்ப்பாசனம் சிலவற்றைச் சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிறது. இப்பொழுது சாலைகளையும் எடுத்துவிட்டால் மிச்சம் அவர்களிடம் இருப்பது பள்ளிக்கூடம்தான். அதையும் எடுத்துவிட்டால் ஒன்றுமே இருக்காது.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : பல ஆண்டு காலமாக பேருந்து ஓடுகின்ற சாலைகளை அரசாங்கச் சாலைகளாக எடுக்கவில்லை. அரசாங்கம் எடுக்கும்போது எத்தனை ஆண்டுகளாக பஸ்கள் ஓடுகின்றன என்பதைப் பார்த்து அந்த அடிப்படையில் அரசாங்கம் எடுத்துக்கொள்ள முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 1960-ம் ஆண்டு முதல் 4,560 மைல் அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது. இந்த ஆண்டில் 300 மைல் எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : கிழக்கு இராமநாதபுரத்தில் சமீபத்தில் அடித்த புயலின் காரணமாக பஞ்சாயத்து யூனியனால் போடப்பட்ட ரோடுகள் எல்லாம் சிதைவுபட்டிருக்கின்றன. அதையாவது அரசாங்கம் ஸ்பெஷலாக ரிப்பேர் செய்வதற்கு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பஞ்சாயத்துச் சாலைகளையும், பஞ்சாயத்து யூனியன் சாலைகளையும் பஞ்சாயத்தில் இருப்பவர்கள்தான் பராமரிக்கவேண்டும்.

திரு. ந. தருமலிங்கம் : தலைவர் அவர்களே, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் ஆகியவற்றின் பராமரிப்பிலுள்ள சாலைகள் எதிர்பாராதவிதமாக சேதத்திற்கு ஆளாகிவிடுகின்றன. உதாரணமாக, பெருமழையின் காரணமாக தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக திருத்துறைப்பூண்டி பகுதியிலே சாலைகள் அழிந்துவிட்டன. இதுபோன்றவற்றிற்கு தனி மான்யமாக ஏதாவது ஒரு தொகையைத் தந்து சாலையை செப்பனிடுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேருந்து செல்லுகின்ற பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள சாலைகளை அரசு எடுத்துக்கொள்வது குறிப்பிட்ட அளவில்தான் எடுத்துக்கொள்ளமுடியும். எல்லாவற்றையும் எடுத்துக்கொள்வது என்பது இயலாத காரியம்.

திரு. கே. விநாயகம் : பஞ்சாயத்து யூனியன்களிலே இருக்கும் ரோடுகளை யார் போட்டாலும் அவற்றைப் பராமரித்தால்தான் பொதுமக்களுக்கு நன்மை பயக்கும். அவைகளை ஹைவேஸ் எடுத்துக்கொள்ள மறுக்கிறார்கள். அவைகளை கடவுள் பார்த்துக்கொள்ளட்டும் என்று விட்டுவிடுகிறார்கள். இதனால் அந்த ரோடுகளில் போகின்ற கார், வண்டிகள் எல்லாம் பல சிக்கல்களுக்கு ஆளாகின்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகையால் அதை மெயின்டனன்ஸ் செய்வதற்காவது அட்லீஸ்ட் பஞ்சாயத்துக்களுக்கு அதிகமாகப் பணம் தர முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த அமைச்சர் வரவில்லை. பதில் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : கோவைப் பகுதியிலே ஹைவேஸ் ரோடுகள் குறிப்பாக பாப்பம்பட்டி—திருச்சி ரோடை எடுத்துக்கொண்டால், சென்ற பத்து ஆண்டுகளாக ஒன்றும் செய்யப்படாமல் இருக்கிறது. பஸ்களும் மக்களும் போகமுடியாத நிலைமையில் இருக்கிறது. ஆகையால் சர்க்கார் கவனித்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : குறிப்பிட்ட ஏதாவது இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் எழுதி அனுப்பினால் கவனிக்கப்படும்.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, ஸ்தல ஸ்தாபன ரோடுகளுக்கு மானியம் அளிக்கும்போது அந்தந்த பஞ்சாயத்தின் ஜனத்தொகை அடிப்படையிலே அளிக்கப்படுகிறது. அப்படியில்லாமல் பஞ்சாயத்துகளில் உள்ள ரோடுகளின் நீளத்தின் அடிப்படையில், பராமரிப்பதற்கு இருக்கக்கூடிய வகையில் அளித்தால் நலமாக இருக்கும். அதைப்பற்றி அரசு கவனிக்க முன்வருமா ?

1968 மார்ச் 2]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேருந்துகள், வண்டிகள் செல்லுகின்ற பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் சாலைகளை எந்த அளவுக்கு அரசாங்கம் எடுத்துக்கொள்கிறது என்ற அளவிலேதான் கேள்வி இருக்கிறது. ஆகையால் தனிக் கேள்வி போடவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : ஊராட்சி, ஊராட்சி மன்றங்கள் போடும் புதிய சாலைகளை நிர்வகிக்கும் பொறுப்பை பெருவழித்துறைக்கு மாற்றுவதுப்பற்றிய கேள்வி. ஆகவே அதைப்பற்றிமட்டும் துணை வினா கேளுங்கள்.

திரு. சொ. கோவிந்தராசன் : கடலூரிலிருந்து ஒரு ரோடு ஜெயில் வழியாக போகிறது. அதை அரசாங்கம் எடுத்துக்கொள்வது சாலச் சிறந்ததென்று ஊராட்சி ஒன்றியமும் தீர்மானம் போட்டிருக்கின்றது, அபிவிருத்தி மன்றமும் சிபார்சு செய்திருக்கிறது. ஆகையால் அதை அரசாங்கம் எடுத்துக்கொள்வதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அரசு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று தீர்மானம் போடுவது சுலபம், எடுப்பது கஷ்டம்.

திரு. அ. ஆறுமுகம் : பஞ்சாயத்து யூனியன் ரோடுகள் போடுகின்றபோது வழியிலே ஒரு நிலத்திற்குரியவர் தடுத்துவிட்டார்கள். அதனால் ரோடு போடமுடியாமல் 4, 5 ஆண்டுகளாக அப்படியே இருக்கிறது. அதை மாற்றுவதற்கு பஞ்சாயத்து யூனியனுக்கு முழு அதிகாரம் அரசு கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுடைய சாலைகளை அரசு எடுத்துக்கொள்வதுபற்றிய கேள்வி இது.

திரு. ஆர். கருப்பையா : பெருவழித்துறையின்மூலமாக கப்பி போடுவதற்கு காலதாமதம் ஆகிறது. கோடை காலத்தில் தண்ணீர் சரியாகக் கிடைப்பதில்லை. அப்போது கப்பிரோடு போடுகிறார்கள். குளிர்காலத்தில் தார் ரோடு போடுகிறார்கள். இவை சரியாக அமைவதில்லை. இது, திருச்சி மாவட்டத்தில் நடந்திருக்கிறது. இதுபோன்றவற்றைத் தடுத்து எந்தெந்த காலத்தில் போடவேண்டுமோ, அந்தந்த காலத்தில் போடுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எந்தெந்த காலத்தில் சாலைகள் போடுவது என்பதில்லை. எவ்வளவு காலத்தில் பழுதடைகிறதோ அந்த அளவில்தான் பராமரிப்பு இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஊராட்சி, ஊராட்சி மன்றங்கள் போடும் புதிய சாலைகளை நிர்வகிக்கும் பொறுப்பை, பெருவழித் துறைக்கு மாற்றுவதுபற்றிய கேள்வி. ஆகவே அதுபற்றிய கேள்வியைப் போடவும்.

திரு. கே. போஜன் : நீலகிரி மாவட்டத்தில் ஊராட்சி மன்ற ரோடுகளை பெருவழித்துறை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா ? அப்படியிருந்தால் அதைப்பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தனியாக எதுவும் வரவில்லை. பொதுவாக வந்த கோரிக்கைகளைப்பற்றி ஒரு பட்டியல் தயாரிக்கப் பட்டிருக்கிறது.

திரு. கரு. சிமைச்சாமி : கிழக்கு இராமநாதபுரம் பகுதியிலுள்ள ரோடுகளைப் பற்றி அமைச்சர் அவர்களுக்குத் நன்றாக தெரியும். சமீபத்தில் அடித்த புயலின் காரணமாகப் பாதிக்கப்பட்ட ரோடுகளை பஞ்சாயத்து யூனியன்களால் செப்பனிட முடியவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து அந்தப் பகுதியைத் தனியாக எடுத்துக் கொண்டு செப்பனிடுவதற்கு நிதி வசதி அளிக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தனியாக நிதிவசதி அளிப்பதற்கேற்ற அளவு நம்முடைய நிதிவசதி செழுமையாக இல்லை. இருந்தாலும் அதைப்பற்றி யோசிப்பது பற்றியே பரிசீலனை செய்யவேண்டும்.

திரு. மு இரத்தினசபாபதி : மாவட்டக் கழகங்கள் அமைத்த பெரிய ரோடுகள் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன்கள் அவற்றைப் பராமரிக்கப் பணம் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ரோடுகளைப் பராமரிப்பதற்காக பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகப் பணம் ஒதுக்க அரசு முன் வருமா ?

(பதில் இல்லை.)

திரு. ஆ. கு. சுப்பையா : இந்த ஆண்டு 300 மைல் தொலைவுள்ள பஞ்சாயத்து யூனியன் சாலைகள் பெருவழித் துறையால் எடுத்துக்கொள்ளப் படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாவட்ட வாரியாக எத்தனை மைல்கள் எடுத்துக் கொள்ளப் போகிறார்கள் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தனிக் கேள்வி கேட்டால் அந்தப் பட்டியலை அவை முன் வைக்கமுடியும். பட்டியல் இப்போதே என்னிடத்தில் இருக்கிறது. படிக்க ஆரம்பித்தால் அரை மணி நேரம் ஆகும்.

திரு. எம். எஸ். மணி : ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து பஸ்கள் ஓடுகின்ற ரோடுகளை ஹைவேஸ் டிப்பார்ட்மெண்டில் எடுத்துக்கொள்வதாக ஒரு திட்டம் இருக்கிறது. ஆனால் அந்தத் திட்டப்படி எடுத்துக்கொள்ளப் படாத ரோடுகள் பல இருக்கின்றன. அவற்றை உடனடியாக எடுத்துக் கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப்பட்ட சீனியாரிடி பிரகாரந்தான் சாலைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அந்த வகையில்தான் இந்த ஆண்டு 300 மைல்கள் அளவுள்ள சாலைகள் எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : ஊராட்சி ஒன்றியங்களால் புதிதாகப் போடப்பட்ட சாலைகளை பெருவழித்துறைக்கு மாற்றுவதற்கு ஏதுவாக கடந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட்டு போடப்பட்ட சாலையின் நீளம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கடந்த ஆண்டு 250 மைல் அளவுக்கு சாலைகள் போடப்பட்டிருக்கின்றன.

திரு. க. இராமமூர்த்தி : கடற்கரைப் பகுதிகளில், மரக்காணம் போன்ற பகுதிகளில் மணற்பாங்காக இருப்பதால் ரோடுகள் போட அதிகமாகச் செலவாகிற நிலைமை இருப்பதால் அந்தப் பகுதிகளைப் பொறுத்தவரை பெருவழித்துறை எடுத்துக்கொண்டு ரோடுகளை போட்டுக் கொடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவை அரசாங்கச் சாலைகளாக இருந்தால் கவனிக்க ஏதுவாக இருக்கும். ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களின் சாலைகளாக இருந்தால் ஏற்கனவே சொன்ன அடிப்படையில்தான் ஆராயப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Panchayats and panchayat unions are not maintaining the roads properly and are not carrying out repairs. To ensure proper maintenance of roads, will the Hon. Minister be pleased to authorise the Highways Department to supervise the roads and send reports to the Government.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போதே நெடுஞ்சாலைப் பணித் துறையினர் மூலமாகத்தான் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. அவற்றை ஊராட்சிகளோ, ஊராட்சி ஒன்றியங்களோ சரியாகப் பேணி வரவில்லை என்றால் ஆங்காங்கு இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் பொறுப்பிலுள்ளவர்களைத் தூண்டி ஊக்குவிப்பது நலமாக இருக்கும்.

திரு ஏ. கோ. பாலகிருஷ்ணன் : புயல் அடித்த பகுதிகளில் எல்லாம் பழுதாகிவிட்ட ரோடுகளை பஞ்சாயத்தாலோ, பஞ்சாயத்து யூனியனாலோ நிர்வகிக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதிகளுக்கு ஒரு சலுகை கொடுத்து, ஏரிகளையெல்லாம் அரசாங்கமே எடுத்து பழுது பார்த்துக் கொடுப்பது போல் அந்த ரோடுகளை எல்லாம் அரசாங்கமே எடுத்துக் கொள்வதற்கு இனிமேலாவது வழி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எல்லாவற்றுக்கும் ஒரே பதில், இப்போதுள்ள நிதிநிலை வசதியைப் பொறுத்துத்தான் இவை எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதுதான்.

திரு. வ. ஜார்ஜ் : பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள ரோடுகள் சில பாலங்களைக் கட்டும் பொறுப்பை அவர்கள் ஏற்று நடத்தும்போது, அந்த யூனியனிலுள்ள ஒரு வருட வருமானம் முழுவதுமே அதற்குச் செலவிட வேண்டியிருக்கிறபடியால் மற்ற வேலைகள் பாதிக்கப்படும் நிலைமையில் இருக்கின்றன. ஆகவே, குறிப்பிட்ட தொகைக்கு மேல் செலவாகக் கூடிய பாலங்களை ஹைவேஸ் டிப்பார்ட்மெண்ட் எடுத்து நடத்துமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சாலைகள் அமைக்கின்ற நேரத்தில் பாலங்களினுடைய பிரச்சினைகளும் வருகின்றன. அவைகளையும் உள்ளிட்டுத்தான் ஆண்டுதோறும் குறிப்பிட்ட அளவு சாலைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. பேருந்துகள் செல்லும் ரோடுகள் 4,500 மைல் வரை கடந்த ஆறு, ஏழு ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. பேருந்து வழித் தடங்கள் அல்லாத முக்கியத்துவம் வாய்ந்த சாலைகளில் 720 மைல் அளவுக்கு எடுத்திருக்கிறார்கள். அவற்றிலே பாலங்கள் வந்தால் கட்டத் தயாராக இருக்கிறார்கள். எதையும் அவ்வப்போது இருக்கிற நிதி நிலைக்குத் தக்கவாறுதான் செய்ய முடியும்.

திரு. வி. டி. அண்ணாமலை : சில ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் குறுகிய அளவு தூரமுள்ள சாலைகள் இருக்கின்றன. சில ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் அதிக தொலைவு உள்ள சாலைகள் இருக்கின்றன. ஆகவே, நீளத்திற்குத் தகுந்த முறையில் மானியம் வழங்க சர்க்கார் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சர்க்கார் யோசிப்பது எல்லாம் பணம் இல்லையே என்பதுதான்.

மாயூரத்தில் சாலை அகலப்படுத்தல்

*121 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், மாயூரம் நகரில் தற்போதுள்ள அரசின் பராமரிப்பிலுள்ள 2-ம் எண் நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதுபற்றி அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) நிதி வசதி கிட்டும்போது, இப்பணியைத் திட்ட இனமாக ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : மாயூரம் நகரத்தில் 12 அடி அகலமே இருக்கிற அந்த ஹைவேஸ் பாதையை விரிவாக்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தச் சாலையை விரிவுபடுத்துவதற்கு ஆகும் தோராயச் செலவு ரூ. 1,25,000 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதுபற்றி எதிர்காலத் திட்டங்களில் ஆலோசிக்கப்படுவதாக இருக்கிறது.